தலைப்பு 318 - ஊவா மாகாண சபை மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2018 ஆம் ஆண்டு

## 1. தொலைநோக்கு செயற்பணி மற்றும் செயற்பாடுகள்

---

### 1.1 தொலைநோக்கு

---

பெருமதிப்புடன் ஊவாவின் சவால்களை நோக்கி

### 1.2 செயற்பணி

---

ஊவா மாகாணத்தில் உள்ள மற்றும் வெளி நிலைகளில் பெறப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை செயற்திறன் மிக்க வகையில் பயன்படுத்தி ஊவா மாகாண மக்களின் பொருளாதார, சமூக, உடல் மற்றும் உள வளத்தினை மேம்படுத்துவதனூடாக அவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர் நிலைக்கு இட்டுச்சென்று ஒவ்வொருவருடைய நம்பிக்கை மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதலாகும்.

### 1.3 செயற்பாடுகள்

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பாடுகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுதல்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

---

### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

ஊவா மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 20,547.80 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 19,053.00 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,494.80 மில்லியன் அல்லது தேறிய நிதிஏற்பாட்டில் 7.27 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 16,268.40 | 16,268.40 | - | - |
| மூலதனம் | 4,279.40 | 2,784.60 | 1,494.80 | 34.93 |
| மொத்தம் | 20,547.80 | 19,053.00 | 1,494.80 | 7.27 |

3. **கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு மாகாண சபையினால் மாகாண சபையின் நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்து பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையின் நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.